# வலிகாமம் வலயம்

**பொருளியல் - II** **தரம் - 12**

**புள்ளித்திட்டம்**

**பகுதி II**

01. i.

- மாற்றுத் தெரிவுகள் உள்ளபோதுயாதாயினும் ஒருதெரிவுக்காக இழக்கப்படும் அடுத்தமிகச் சிறந்ததெரிவின் பெறுமதிஅமையச்செலவுஎனப்படும்.
- அமையச்செலவுநிதிரீதியானஎண்ணக்கருவல்ல. அதுமெய்ரீதியானஎண்ணக்கருவாகும்.
- அமையச்செலவு உள்ளாந்தஎண்ணக்கருவாகும். இதுநபர்களுக்கிடையில் வேறுபடும்.
- அமையச்செலவை பொருளியல் செலவுஎனவும் அழைப்பர்.
- அமையச்செலவு காரணமாக வெளிவாரியான செலவு தோன்றாது.

(02 புள்ளிகள்)

அமையச்செலவு பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பங்கள்

- வளங்கள் அருமையற்றதாகக் காணப்படுதல்.
- வளங்கள் ஒரு பயன்பாட்டினை மட்டும் கொண்டிருத்தல்.
- உற்பத்தி செயற்றிறன் இன்மை இருத்தல் (வேலையின்மை/ குறைந்த தொழில் மட்டம்).
- பொருளாதாரமல்லாத வளங்களை உற்பத்தியில் பயன்படுத்தல்.

(02 புள்ளிகள்)

ii. ஓரலகு உள்ளீட்டுக்குரிய வெளியீட்டு அளவை விளைதிறன் என்பர்.

(01 புள்ளி)

$$\text{விளைதிறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

(01 புள்ளி)

**வளங்களின் விளைதிறனை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகள்.**

- தொழினுட்பத்தினை நவீனமயப்படுத்தல்.
- மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல்.
- முகாமைத்துவத்தை மேம்படுத்தல்.
- புத்தாக்கங்களை விருத்தி செய்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல். (02 புள்ளிகள்)

iii.

| சந்தைப்பொருளாதாரம் | கட்டளைப் பொருளாதாரம் |
|---|---|
| சாதனங்கள் தனியார் உரிமையாகக் காணப்படும் | ஊழியர் தவிர்ந்த ஏனைய சாதனங்கள் அரச உரிமையாகக் காணப்படும் |
| தனியார் முயற்சியாண்மை காணப்படும் | அரச முயற்சியாண்மை காணப்படும் |
| இலாப நோக்கில் உற்பத்திகள் நடைபெறும் | சமூக நலன்நோக்கில் உற்பத்திகள் இடம்பெறும் |
| விலைப்பொறி மூலம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் | மத்திய திட்டமிடல் குழு மூலம் தீர்க்கப்படும் |
| நுகர்வோரின் விருப்புக்கேற்ப உற்பத்தி இடம்பெறும் | அடிப்படைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி இடம்பெறும் |
| பொருள் சார் ஊக்குவிப்புக்கள் காணப்படும் | அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக்கள் காணப்படும் |

| | |
|---|---|
| அரசாங்கத்தின் பணிகள் மிகவும் குறைவாகக் காணப்படும்<br>Eg:- 1. ஐக்கிய அமெரிக்கா<br>2. பிரித்தானியா | அரசாங்கத்தின் பணிகள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணலாம்<br>Eg:- 1. கியூபா<br>2. வடகொரியா |

(4 x 1 = 4 புள்ளிகள்)



iv. சந்தைப் பொருளாதாரத்தில் தனியார் சொத்துரிமையின் முக்கியத்துவங்கள் வருமாறு

(1) சந்தை முறையினை பேணிச் செல்ல உதவும்
(2) உற்பத்தியின் உரிமையை பாராட்ட உதவும்
(3) வர்த்தகமும் பரிமாற்றமும் வினைத்திறன்களைச் செயற்படுத்துவதற்கு அவசியம்
(4) பொருளாதார வளர்ச்சி செயன்முறையில் தனியார் பங்கேற்பதற்கும் தனியார் சொத்துரிமை அவசியமாகும்.
(5) இயற்கை வளங்களின் மிகை நுகர்வினைக் கட்டுப்படுத்தி இயற்கை வளங்களின் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கும் (எதிர்க்கனிய வெளிவாரி விளைவுகளை கட்டுப்படுத்துதல்) தனியார் சொத்துரிமை அவசியமாகின்றது.

(4 x 1 = 4 புள்ளிகள்)

v.

- ஒரு சமூகம் தன் நிகழ்கால நுகர்வினை தியாகம் செய்யுமளவிலேயே மூலதனவர்க்கம் தங்கியிருக்கும்.

| | |
|---|---|
| நிகழ்கால நுகர்வினை சிறியளவால் இழக்கத் தயாராகவுள்ள சமூகத்தின் எதிர்கால வளர்ச்சி மிகவும் குறைவாகக் காணப்படும். | நிகழ்கால நுகர்வினை பெரியளவால் இழக்கத் தயாராகவுள்ள சமூகமொன்று எதிர்காலத்தில் உயர்ந்த வளர்ச்சியை அதிகரிக்கும். |
|  |  |

(2 புள்ளிகள்) (2 புள்ளிகள்)

02.

i. மற்றவைகள் மாறாதபோது, பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது, கேள்வித்தொகை குறைவதும், மாறாக விலை வீழ்ச்சியடையும்போது கேள்வித் தொகை அதிகரிப்பதும், கேள்வி விதி எனப்படும். (2 புள்ளிகள்)

இங்கு பண்டத்தின் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையில் எதிர்த்தொடர்பு காணப்படும். இதற்குரிய காரணங்கள்

1. வருமான விளைவு
2. பிரதியீட்டு விளைவு / பதிலீட்டு விளைவு

**வருமான விளைவு**

மாற்றவைகள் மாறாத நிலையில் சாதாரண பண்டமொன்றின் விலையில் மாற்றம் ஏற்படுகின்ற போது நுகர்வோனின் மெய்வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் அப்பண்டத்தின் கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றம் வருமான விளைவு எனப்படும்.

**பிரதியீட்டு விளைவு / பதிலீட்டு விளைவு**

மற்றவைகள் மாறாதபோது பண்டமொன்றின் விலைமாற்றமடையும் போது சார்பு விலையில் ஏற்படும் மாற்றத்தினால் பதிலீட்டுப் பண்டமொன்றின் கேள்வியில் மாற்றம் ஏற்பட்டு குறித்த பண்டமொன்றின் கேள்வித்தொகையில் ஏற்படுகின்ற மாற்றம் பிரதியீட்டு விளைவு எனப்படும்.

(2 புள்ளிகள்)

ii. **சாதாரண பண்டம்**

- நுகர்வோனின் வருமானத்திற்கும் கேள்விக்குமிடையில் நேர்த்தொடர்பு காணப்படும்.
- விலைசார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும், வருமான நெகிழ்ச்சி நேர்க்கணியமாகவும் காணப்படும்.
- வருமான விளைவு நேர்க்கணியமாகவும் பதிலீட்டு விளைவு எதிர்க் கணியமாகவும் காணப்படும்.

(2 புள்ளிகள்)

**இழிவுப் பண்டம்**

- நுகர்வோனின் வருமானத்திற்கும் கேள்விக்குமிடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்.
- விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, வருமான நெகிழ்ச்சி இரண்டும் எதிர்க்கணியமாக இருக்கும்.
- எதிர்க் கணிய வருமான விளைவை விட எதிர்க் கணியப் பதிலீட்டு விளைவு பெரிதாகக் காணப்படும்.

(1 புள்ளி)

**கிஃன் பண்டம்**

- இழிவுப்பண்டத்தின் ஒரு வகையாக கிஃன் பண்டம் உள்ளது.
- விலைக்கும், கேள்வித்தொகைக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படும்.
- கேள்வியின் விலை நெகிழ்ச்சி நேரானதாகவும், வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும் காணப்படும்.
- எதிர்க் கணிய வருமான விளைவை விட எதிர்க் கணியப் பதிலீட்டு விளைவு சிறியதாகக் காணப்படும்.

(1 புள்ளி)

iii.

- நெல்லுடன் தொடர்புடைய பதிலீட்டு உற்பத்திகளின் விலை குறைதல்
- நெல்லின் உற்பத்திச் செலவு குறைதல் (உள்ளீடுகளின் விலை வீழ்ச்சி)
- நெல் உற்பத்தியில் கையாளப்படும் தொழினுட்ப முன்னேற்றம்

- நெல் உற்பத்தியாளர்களுக்கு அரசு மானியத்தினை வழங்குதல்.
- காலநிலை மாற்றம் நெல் உற்பத்திக்கு சாதகமாயிருத்தல்.
- நெல் உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.

(4 x 1 = 4 புள்ளிகள்)

iv.

அ)

$$EI = \frac{\Delta Q\%}{\Delta I\%}$$

$$X \Rightarrow \frac{-10}{20} = -0.5 \qquad Y \Rightarrow \frac{30}{20} = 1.5 \qquad Z \Rightarrow \frac{15}{20} = 0.75$$

(மூன்று விடையும் சரியாயின் 02 புள்ளி இரண்டு மட்டும் சரியாயின் 01 புள்ளி)

ஆ) X = இழிவுப்பண்டம்

Y = ஆடம்பரப்பண்டம்

Z = அத்தியாவசியப்பண்டம்

(மூன்று விடையும் சரியாயின் 02 புள்ளி இரண்டு மட்டும் சரியாயின் 01 புள்ளி)

v. அ)

Qd = a - bp

$b = \frac{\Delta Qd}{\Delta p} = \frac{20}{50} = 0.4$

$20 = a - 0.4x100$

$20 = a - 40$

$60 = a$

**Qd = 60 - 0.4p** ($\frac{1}{2}$புள்ளி)

Qs = a + bp

$b = \frac{\Delta Qs}{\Delta p} = \frac{30}{50} = 0.6$

$60 = a + 0.6x100$

$60 = a + 60$

$0 = a$

**Qs = 0.6p** ($\frac{1}{2}$புள்ளி)

Qd = Qs

60 - 0.4p = 0.6p

$60 = 0.6p + 0.4p$

$60 = p$

Ep = ரூபா 60

EQ = 36 அலகுகள்

Qs = 0.6x 60

Qs = 36 அலகுகள்

(01 புள்ளி)

ஆ)

$PEd = b \times \frac{P}{Qd}$

$= -0.4\, x\, \frac{60}{36}$

$= -0.666\ (-0.67)$

(01 புள்ளி)

$Cs = \frac{mdp - Pm}{2} \times Qm$

$= \frac{150-60}{2} \times 36$

$= \frac{90}{2} \times 36$

= 1620ரூபா

(01 புள்ளி)

03.

i.

$Qs = -200 + 5 (p - 8)$

$= -200 + 5p - 40$

$$\boxed{Qs_T = -240 + 5p}$$

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P | 4 | 8 | 12 | 16 | 20 | 24 |
| $Qs_T$ | -220 | -200 | -180 | -160 | -140 | -120 |

(6 x 0.5 = 3 புள்ளி)

ii.

அ) $Qd = Qs$

$600 - 5p = -240 + 5p$

$840 = 10p$

$\frac{840}{10} = p$

$84 = p$

Ep = ரூபா 84

EQ = 180 அலகுகள்

$Qd = 600 - 5 \times 84$

$= 600 - 420$

$= 180$ அலகுகள்

(02 புள்ளி)

ஆ) $Cs = \frac{mdp - Pm}{2} \times Qm$

$= \frac{120-84}{2} \times 180$

$= \frac{36}{2} \times 180$

$= 3240$ ரூபா

(01 புள்ளி)

இ) $Ps = \frac{Pm - msp}{2} \times Qm$

$= \frac{76-40}{2} \times 180$

$= \frac{36}{2} \times 180$

$= 3240$ ரூபா

(02 புள்ளி)


iii.

$PEd = 0$


(01 புள்ளி)

$PEs = \propto$

(01 புள்ளி)




(01 புள்ளி)




(01 புள்ளி)

iv. பண்டமொன்றின் சமநிலை விலை நுகர்வோனுக்கு பாதகமாக இருக்கும் போது அவர்களுக்கு ஆதரவாக அரசினால் நிர்ணயிக்கப்படுகின்ற சட்டரீதியான விலையை உச்ச விற்பனை விலை என்பர்.

(01 புள்ளி)


**உச்ச விற்பனை விலையின் விளைவுகள்**

1. மிகைக்கேள்வி காரணமாகச் சந்தையில் தொடர்ச்சியாகப் பொருட் பற்றாக்குறை காணப்படல்.
2. சட்டரீதியற்ற கறுப்புச் சந்தை விலையின் கீழ் பொருட்களை விற்பனை செய்ய முயற்சித்தல்.
3. கறுப்புச் சந்தை விலை காரணமாக முன்னர் காணப்பட்ட சமநிலை விலையை விட (P) உயர்வான விலையில் (P2) பண்டம் விற்பனை செய்யப்படல்
4. ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாட்டுடன் உற்பத்தியாளரது இலாபம் வரையறைக்குட்படுவதால் அவ்வுற்பத்தித்துறையில் செய்யப்படும் முதலீடுகள் குறைவடையும்.
5. ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு காரணமாக நுகர்வோன் மிகைக்கும் உற்பத்தியாளன் மிகைக்கும் பாதகமான நிலைமை ஏற்பட்டுச் சமூக நலனிலும் பாதிப்பு ஏற்படல்.

(3 x 1 = 3 புள்ளி)

v.

- நுகர்வோன் மிகை குறையும். B + C ஆல்
- உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும். B + C + J ஆல்
- பொருளாதார மிகை J ஆல் அதிகரிக்கும்.
- அரசுக்கு செலவு ஏற்படும். (C + E + G + H + K + J)
- தேறிய சமூக நலன் இழப்பை தோற்றுவிக்கும். (C + E + G + H + K )




(3 புள்ளி)

(1 புள்ளி)

04.


i. குறுங்காலத்தில் நிலையான உள்ளீடுகளுடன் மாறும் உள்ளீடுகளை சம அளவால் அதிகரிக்கும் போது மாறும் உள்ளீட்டின் (ஊழியம்) எல்லை உற்பத்தி, சராசரி உற்பத்தி என்பன ஒரு கட்டத்தின் பின் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லுதல் குறைந்து செல்லும் விளைவு எனப்படும். குறுங்கால உற்பத்தியின் இரண்டாம் கட்டத்தில் இவ்விதி தொழிற்படும்.

(02 புள்ளி)

இவ்விதி தொழிற்படும் போது சராசரி மாறும் செலவு, எல்லைச் செலவு என்பன அதிகரித்துச் செல்லும்.

(02 புள்ளி)

ii. $mc = \frac{\Delta TC}{\Delta Q}$ $(\frac{1}{2})$ $ATC = \frac{TC}{Q}$ $(\frac{1}{2})$



- எல்லைச்செலவு குறைந்து அதிகரித்துச் செல்லத் தொடங்கும் வரை சராசரி மொத்தச் செலவு குறைவடையும்.
- எல்லைச்செலவு அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரிக்கும் போது சராசரி மொத்தச் செலவு குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்.
- எல்லைச்செலவு வளையி சராசரி மொத்தச்செலவின் அதிதாழ்ந்த புள்ளியை வெட்டிச் செல்லும்.

(02 புள்ளிகள்)

iii. அ) நிறைபோட்டிச்சந்தை

- ஏராளமான விற்பனையாளர்களும் நுகர்வோர்களும் காணப்படுவர்.
- உற்பத்திகள் ஓரினத்தன்மையானவையாகக் காணப்படும்.
- பூரண பதிலீட்டைக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் காணப்படும்.
- இங்கு நிறுவனம் விலையை ஏற்போனாகக் (Price Taker) காணப்படும். அதனால் அந்நிறுவனம் எதிர்கொள்ளும் கேள்விக்கோடு முடிவிலி கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
- சந்தையில் உட்பிரவேசிக்க, வெளியேறுவதற்கு நிறுவனங்களுக்கு தடையில்லை.
- கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் சந்தை பற்றிய தகவல்களை பூரணமாகவும் செலவின்றியும் பெற்றுக்கொள்ள முடியும்.
- இங்கு காரணிகளின் அசைவுக்கு தடையில்லை.
- இங்குள்ள நிறுவனங்களுக்கு விளம்பரம் தேவையில்லை.
- இங்கு ஒரு நிறுவனத்தின் சந்தைப்பங்கு மிகவும் சிறியதாகக் காணப்படும்.
- நீண்டகாலத்தில் இச்சந்தையிலுள்ள நிறுவனங்கள் யாவும் சாதாரண இலாபத்தினை (AR = AC) பெற்றுக்கொள்ளும்.

(02 புள்ளிகள்)

ஆ) தனியுரிமைப் போட்டிச் சந்தை

- தொழிலில் ஏராளமான நிறுவனங்கள் காணப்படும்.
- ஒவ்வொரு நிறுவனமும் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்யும். (உற்பத்தி பேதப்படுத்தல்)
- இங்கு நெருங்கிய பதிலீட்டைக் கொண்ட பொருள் காணப்படும்.
- தொழிலுக்குள் நிறுவனம் பிரவேசிக்கவோ/ வெளியேறவோ தடைகள் எதுவும் இல்லை.
- இங்குள்ள நிறுவனமொன்று தன் உற்பத்திப் பொருளின் விலையை உருவாக்கிக் கொள்ளும்.
- நிறுவனத்தின் கேள்வி வளையி மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் வடிவில் காணப்படும். (PEd > 1)
- காரணிகளின் அசைவுக்கு தடையில்லை.
- இச்சந்தையிலுள்ள நிறுவனம் ஒன்று நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தினை பெற்றுக்கொள்ளும்.
- இங்கு ஒவ்வொரு நிறுவனமும் தமது உற்பத்தி பொருளுக்கு விளம்பரத்தை மேற்கொள்ளும்.

(02 புள்ளிகள்)

iv.

ஆம் (01 புள்ளி)

TR = 50 x 400

= 20,000 ரூபா (01 புள்ளி)

TC = TFC + TVC


25,000 = 6,000 + TVC

TVC = 19,000/= (01 புள்ளி)

மொத்த மாறும் செலவை ஈடு செய்வதற்கு மொத்த வருமானம் போதுமானதாகயிருப்பதனால் நிறுவனத்தினால் தொடந்தும் X பண்டத்தினை நிரம்பல் செய்ய முடியும். (01 புள்ளி)

v. உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலை வாய்ப்பில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு மாற்றல் வருமானம் எனப்படும்.

(02 புள்ளிகள்)




காரணி முடிவிலி (பூரண) நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் போது. (01 புள்ளி)

05. i. பொருளாதாரமொன்றின் மெய்வெளியீடு, தொழில்வாய்ப்பு, பொதுவிலைமட்டம் ஆகியவற்றில் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்களை வர்த்தக சகடவோட்டம் எனப்படும். (01 புள்ளி)

* பின்னடைவு (ஒடுக்கம்) * மந்தம் (தாழ்வு) * மீட்சி (விரிவாக்கம்) * செழிப்பு (உச்சம்)

(நான்கு விடயங்களும் விளக்கத்துடன் இருப்பின் 3 புள்ளிகள்)

ii. **அடிப்படை விலை**

- உற்பத்தியாளர்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விற்பனைக்கு தயாரான வைத்திருக்கும் நிலையில் அறவிடப்படும் விலைகள் அடிப்படை விலை எனப்படும்.
- இது காரணிச் செலவின் அடிப்படையில் மதிப்பிடப்படும்
- உற்பத்தி செய்யப்பட்ட பொருள் சேவைகளுக்கு கொள்வனவாளர்களிடமிருந்து உற்பத்தியாளர்களால் பெறக் கூடிய விலையை அடிப்படை விலை குறிக்கும்

(02 புள்ளிகள்)

**கொள்வனவாளர் விலை**

- குறித்த பொருள் சேவைகளுக்கு நுகர்வோன் உண்மையில் செலுத்துகின்ற விலையை கொள்வளவாளர் விலை என்பர்.
- கொள்வளவாளர் விலையுடன் உற்பத்தி மீதான தேறிய வரிகள், வணிக விளிம்பில் உள்ளடக்கப்படும் இடைத்தரகர்களின் அறவீடுகளும் போக்குவரத்துச் செலவும், நுகர்வோர் மீதான வரி என்பன கூட்டப்படுவதோடு நுகர்வுக்குரிய மானியத்தை கழிப்பதன் மூலம் கொள்வனவாளர் விலையை பெற முடியும். (02 புள்ளிகள்)

iii.

அ) உள்ளடக்கப்படுவதில்லை.

இது ஒரு நாட்டின் பொருளாதார எல்லைக்கு அப்பால் உற்பத்தி செய்யப்பட்டவை. இறக்குமதிகள் GDE இருந்து கழிக்கப்படுவதால் GDP க்குள் சேர்க்கப்படுவதில்லை.

ஆ) உள்ளடக்கப்படுவதில்லை.

இது மெய் சொத்துக்கள் சாராத முதலீடு அதனால் GDPக்குள் சேர்க்கப்படுவதில்லை.

இ) உள்ளடக்கப்படும்

இது பயன்தரும் பொருளாதார நடவடிக்கை என்பதனால் உற்பத்தி வரப்புக்குள் உள்ளடங்கி GDPக்குள் சேரும்.

ஈ) உள்ளடக்கப்படும்.

இது ஒரு காரணி வருமானமாகும். அதனால் சேர்க்கப்படும்.

(01 x 04 = 04 புள்ளிகள்)

(iv)

அ) GDP $= C + G + I + X - m$
$= 70000 + 20000 + 21000 + (24000 - 30000)$
$= 105000$BR

(02 புள்ளிகள்)

ஆ) GNI $= GDP + NPI$
$= 105000 + (4000)$
$= 101000$BR

(02 புள்ளிகள்)

இ) $GNI_D$ $= GNI + NSI$
$= 101000 + 5000$
$= 106000$BR

(02 புள்ளிகள்)

ஈ) NS $= GNI_D - (C + G)$
$= 106000 - (70,000 + 20,000)$
$= 16000$ BR

அல்லது

NS $= I + NX + NPI + NSI$
$= 21000 + (6000) + (4000) + 5000$
$= 16000$BR


(02 புள்ளிகள்)

06. i.

பேரினப் பொருளாதாரச்சமநிலைக்குரிய நிபந்தனைகள் வருமாறு.

1. வருமானமும் செலவும் சமனாக இருத்தல். $(Y = E)$
2. மொத்த நிரம்பலும் மொத்தக் கேள்வியும் சமனாக இருத்தல். $(AS = AD)$
3. உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் சமனாக இருத்தல். $(J = W)$


(02 புள்ளிகள்)




(02 புள்ளிகள்)

ii.

| வீக்க இடைவெளி | சுருக்க இடைவெளி |
|---|---|
| • நிறைதொழில்மட்ட வெளியீட்டினை விட சமனிலைமட்ட வெளியீடானது பெரிதாக இருக்கும்போது வீக்க இடைவெளி ஏற்படும். $[Y_F < Y]$ | • நிறைதொழில்மட்ட வெளியீட்டினை விட சமனிலைமட்ட வெளியீடானது சிறிதாக இருக்கும்போது சுருக்க இடைவெளி ஏற்படும். $[Y_F > Y]$ |
| • இங்கு நிறைதொழில்மட்ட வெளியீட்-டினை விட மொத்தக் கேள்வி பெரிதாக காணப்படும். | • நிறைதொழில்மட்ட வெளியீட்டினை விட மொத்தக் கேள்வி சிறிதாக காணப்படும். |
| • இங்கு விரிவாக்கம் ஏற்படுவதனால் பொதுவிலை மட்டம் அதிகரிக்கும். | • இங்கு சுருக்கம் ஏற்படுவதனால் பொதுவிலை மட்டம் வீழ்ச்சியடையும். |
| (01 புள்ளி) | (01 புள்ளி) |




(02 புள்ளிகள்)

**முதலீட்டுப் பெருக்கி**

**iii.**

- உட்பாய்ச்சல் மாறியான முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பினால் நாட்டின் வருமானம் அதிகரித்த முதலீட்டில் எத்தனை மடங்கினால் அதிகரிக்கின்றது என்பதனை பெருக்கி வெளிப்படுத்தும். (02 புள்ளிகள்)

  $K = \frac{1}{1-MPC} \quad or \quad \frac{1}{MPS}$ (01 புள்ளி)

  Eg: MPC=0.8 எனின் பெருக்கி 5 ஆகும். (01 புள்ளி)

iv. C = 50 + 0.75y (01 புள்ளி) G = 100

I = 150 NX = -75

Y = C + I + G + NX

Y = 50 + 0.75y + 150 + 100 + (75)

Y = 225 + 0.75y (01 புள்ளி)

0.25Y = 225

$Y = \frac{225}{0.25}$

Y = 900B.R (02 புள்ளிகள்)

v.

அ) yd = y-NT

7400 = 8000 - NT

NT = 600 (01 புள்ளி)

NT = T - TR

600 = T - 50

| T = 650 பில்லியன் ரூபா |
|---|

(01 புள்ளி)

ஆ) BD = NT - G

-200 = 600 - G

G = 800 BR (01 புள்ளி)

Y = C + I + G + NX

8000 = 7100 + I + 500

| I = 400BR |
|---|

+ 800 + (300)

(01 புள்ளி)